# பௌத்த சிற்பங்கள் ஊடாக அறியப்படும் இலங்கை - ஆந்திர உறவுகள்

ப. புஷ்பரட்ணம்

இலங்கை பிரதேச ரீதியில் தனிப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும் பண்பாட்டு வளர்ச்சியில் அது பாரதத்துடன் சிறப்பாக, தென்னிந்தியாவுடன் பண்டைய காலம் தொட்டு நெருங்கிய தொடர்பு கொண்டு வளர்ந்துவந்துள்ளது. ஆயினும் இலங்கையின் புராதன பண்பாட்டு வரலாற்றை ஆராய்ந்த பலரும் வடஇந்தியத் தொடர்புக்கு முக்கியத்துவம் கொடுத்ததுபோல் தென்னிந்தியத் தொடர்பை ஆராய்வதில் அதிக அக்கறை காட்டவில்லை. இதற்கு இலங்கையின் ஆதிகால வரலாற்றைக் கூறும் பாளி இலக்கியங்களில் தென்னிந்தியாவைப் பகைமை நாடாகவும், வட இந்தியாவைப் பாரம்பரிய நட்புறவு கொண்ட பிரதேசமாகவும் கூறப்பட்டுள்ளமையே முக்கிய காரணமாகும். ஆயினும் அண்மைக்கால தொல்லியல், மானிடவியல், சமூகவியல் போன்ற ஆய்வுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து இலங்கைக்கும் திராவிட மொழி பேசும் தென்னிந்தியப் பிரதேசங்களான இன்றைய தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் என்பவற்றிற்கும் இடையே நெருங்கிய கலாசாரத் தொடர்புகள் இருந்துள்ளன என்பதை நிரூபித்துள்ளன. இவற்றின் ஓர் அம்சமாகவே இக்கட்டுரையில் இலங்கை – ஆந்திர பௌத்த சிற்பக்கலை உறவு பற்றி ஆராயப்படுகின்றன.

இலங்கையில் தோன்றிய காலத்தால் முந்திய நுண்கலைகளில் சிற்பக் கலையும் ஒன்ருகும். இதுவும் பிற கலைகள் போன்று இந்நாட்டின் ஆதி மக்களாகிய தமிழ் சிங்கள மக்களின் கூட்டு முயற்சியினுல் வளர்ந்ததொன்ருகும். ஆயினும் பெரும் கலைப் படைப்புக்கள் என்று கூறக்கூடிய சிற்பங்கள் பௌத்த மதத்தின் வருகையைத் தொடர்ந்து வளர்ச்சியடைந்துள்ளன. பௌத்தத்திற்கு முந்திய பிறசமயம் சார்ந்த சிற்பங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை பெரும்பாலும் அழியும் பொருட்களால் ஆக்கப்பட்டதனுல் அவைபற்றி அதிகம் கூற முடியாதிருக்கிறது

பொதுவாக சிற்பக் கலையின் தொன்மையை அறிவதற்கும். உறுதிப்படுத்துவதற்கும் அகழ்வாராய்ச்சி, மானிடவியல் ஆராய்ச்சி என்பன நன்கு உதவுகின்றன. அத்துடன் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், முத்திரைகள், சின்னங்கள் ஆகியவையும் தகுந்த சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன. இச்சான்றுகளை அடிப்படையாக வைத்து இலங்கைச் சிற்பக் கலை பற்றி ஆராய்ந்த இந்நாட்டு, மேல்நாட்டுக் கலைவரலாற்று ஆசிரியர்கள் பலரும் ஆங்காங்கே இலங்கைச் சிற்பக்கலையின் தோற்றம் பற்றியும் ஆராய்ந்துள்ளனர். இவர்களில் சிலர் இலங்கையிலே வரலாற்றுக் காலத்தில் வளர்ந்த கட்டிட சிற்பக்கலை மரபானது முழுமையாக அந்நிய அடித்தளத்தில் எழுந்த மரபு என்றும், வேறு சிலர் இலங்கையின் கலையானது எந்தவித தனித்துவமான அபிவிருத்தியும் இல்லாது வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாக்கப்பட்ட கலையெனவும் கூறுகின்றனர். இன்னும் சிலர் இந்திய கட்டிட சிற்பக்கலை மரபானது இங்கு புகுத்தப்பட்ட பின் அதில் இருந்து உருவாகிய மரபு எனவும் வாதிட்டுள்ளார். (Paranavitana,S.

S. 1957, p. 10) அண்மையில் சிங்கள விகாரைக் கட்டிடக்கலை பற்றி ஆராய்ந்த சேனகபண்டாரநாயக்கா உள்நாட்டுக் கட்டிடக்கலை மரபே இலங்கைக் கலை மரபுக்கு ஊற்றாக அமைந்ததென்றார். இவர் இலங்கைச் சிற்பங்களின் பிரதேச ரீதியான தனித்துவத்தையும் கல், மண், மரம் முதலியவற்றால் அமைந்த புராதன குடிசை அமைப்பினையும் இதற்குச் சான்றாகக் காட்டினர். (Bandaranayaka, S. 1974. p. 11) இந்தியக் கலை மரபின் செல்வாக்கு இலங்கைக் கலை மரபு வளர உதவியது என்பதை இவர் ஏற்றாலும், அதனால் இலங்கைக் கலை மரபு தனது உந்துசக்தியைக் இழக்காது வெளியில் இருந்து கொண்டுவரப்பட்ட சில பண்புகளை அடக்கி வேறு சில பண்புகளைத் தனக்குத் தேவையான முறையில் மாற்றி இன்னும் சில பண்புகளை ஏற்காது வளர்ந்ததென்றார். (Ibid)

ஒரு நாட்டின்மீது இன்னொரு நாட்டின் பண்பாட்டுப் பரவல் அல்லது செல்வாக்கு ஏற்படுகின்றபோது அந்நாடு அப்பண்பாட்டை அப்படியே உள்வாங்கிக்கொள்வதில்லை. அந்நாட்டின் பௌதிக, அரசியல், சமூக சமய, பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப சில தனித்துவம் அல்லது சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். இதே தன்மையை இலங்கை – இந்திய சிற்பக் கலை உறவிலும் காணலாம். இலங்கைச் சிற்பங்கள் சிலவற்றில் இலங்கைக்கே யுரிய தனித்துவமான அம்சங்கள் பல உண்டு என்பதனை மறுப்பதற் கில்லை. அதற்காக இலங்கைச் சிற்பக்கலை சுதேச மரபில் இருந்து வளர்ந்த தெனக் கூறுவதற்கில்லை. கலைகளில் நேசியத்தன்மை கொண்ட பரந்த இந்தியாவுக்குள் பிரதேச ரீதியான தனித்துவங்கள் காணப்படுகின்றன. அதற்காக அவை பிரதேச ரீதியான சுதேச கலைமரபைக் கொண்டு வளர்ந்ததெனக் கூறுவதற்கில்லை. இது போன்ற தன்மையே இலங்கை சிற்பக்கலை மரபிலும் காணப்படுகிறது எனலாம்.

இலங்கையில் காணப்படும் காலத்தால் முந்திய சிற்பங்கள் பௌத்த இந்துமதங்கள் சார்ந்தவையாகும் இச்சிற்பங்கள் இந்திய சிற்பங்களுடன், கலை ரீதியாக மட்டுமன்றி கருத்து அதன் உள்நோக்கம், கலைநுணுக்கம் என்பவற்றிலும் நெருங்கிய ஒற்றுமைத்தன்மை காணப்படுகின்றது. இவ் வொற்றுமையின் தொடக்கத்தைக் கோடிட்டுக் காட்டுவதில் இலங்கையின் பெருங் கற்காலப் பண்பாடு பற்றிய சமீபகால ஆய்வுகள் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது. இப்பண்பாட்டில் காணப்படும் பலவித சுடுமண் பாவைகள், மணிகள், அலங்காரப் பொருட்கள், மட்பாண்டங்களில் காணப் படும் பலவித குறியீடுகள், சித்திரங்கள், சமகால ஆந்திர தமிழ்நாட்டுப் பெருங்கற்காலப் பண்பாட்டுக் கலை வடிவங்களுடன் நெருங்கிய ஒற்றுமைத் தன்மை உடையன. தென்னிந்தியாவில் இப்பண்பாட்டுடன்தான் பழைய ஆலயங்கள் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. (நடன. காசிநாதன், 1978) இதனால் இலங்கையிலும் இந்துக்கலைப் பாரம்பரியத்தின் தொடக்கமாக பெருங்கற்காலப் பண்பாட்டைக் கூறலாம். ஆயினும் இப்பண்பாட்டுக் கலைவடிவங்களின் பல்வேறு அம்சங்கள் பிற்கால பௌத்த சிற்பங்களிலும் இடம்பெறுவதால் இது பௌத்த கலைக்கான மூலக்கூறையும் கொண் டிருந்ததெனக் கூறலாம். எனவே இலங்கையின் பௌத்த, இந்து சிற்ப கலையின் தோற்றத்திற்கான மூலக்கூறு தென்னிந்தியப் பின்னணியில் தோன்றியதெனக் கூறுவதே பொருத்தமாகும். ஆயினும் இலங்கைப் பௌத்த சிற்பக்கலை வரலாற்றை ஆராய்ந்த பலர் இக்கலை இந்நாட்டில்

வளர்வதற்குப் பௌத்த மதம் பரவக் காரணமாக இருந்த வட இந்தியக் கலைமரபே காரணம் எனக் கூறியுள்ளனர். (Paranavitana, S. 1957, p. 9) ஆனால் இலங்கையில் பௌத்த மதமும் பௌத்த கலையும் வளர்ந்த வரலாற்றைச் சமகால ஆந்திரப் பிரதேசத்துடன் தொடர்புபடுத்தி ஆராயும்போது அப்பிரதேசம் இலங்கைப் பௌத்த பண்பாட்டு வளர்ச்சியில் ஏற்படுத்திய செல்வாக்கை உணர முடியும்.

இரு பிராந்தியங்களிற்கும் இடையே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து நெருங்கிய தொடர்புகள் இருந்ததற்கான சான்றுகள் உள. இலங்கையின் காலத்தால் முந்திய இடைக்கற்காலப் பண்பாடும் (Mesolithic Culture), அதையடுத்துத் தோன்றிய பெருங்கற்காலப் பண்பாடும் (Megalithic Culture) தமிழ் நாட்டைப்போல் ஆந்திரப் பிரதேசத்துடனும் ஒற்றுமைத் தன்மை கொண்டு காணப்படுகின்றது. மேலும் இவ்வொற்றுமை வரலாற்றுக் கால ஆரம்பத்துடன் இலங்கையின் பௌத்த மதம், மொழி, எழுத்து ஆகிய துறைகளில் காணப்படுகின்றன. இதற்கு இக்காலத்தில் ஆந்திரப் பிரதேசம் கடல் வாணிபத்தில் செழித்தோங்கியதே காரணமாகும். தொலமி என்ற கிரேக்க ஆசிரியர் மைசோலியா என அழைக்கப்பட்ட கோதாவரி கிருஸ்ணா நதிக்குட்பட்ட பிரதேசத்தில் இருந்தே கப்பல்கள் இலங்கை, தென்கிழக்காசியாப் பிரதேசங்களுக்குச் சென்றதாகக் கூறுகிறார். இந்நாடுகளுடன் ஆந்திரப் பிரதேசம் செய்து கொண்ட கடல் வாணிபமே அந்நாட்டில் பௌத்தமும், பௌத்தக் கலைகளும் வளர்ச்சியடையக் காரணமாகும். இக்கால ரோம ஆந்திர வர்த்தகத்தில் தங்கம், முத்து, சங்கு, யானை, யானைத்தந்தம், பட்டு, வெற்றிலை, நறுமண மூலிகைகள் ஆகிய பொருட்கள் முக்கிய இடம் வகித்ததனால் அவற்றை இயற்கையாகக் கொண்டிருந்த இலங்கையில் ஆந்திர வணிகர்கள் ஈடுபட்டனர். ஆந்திர மன்னர்களில் தலைசிறந்தவன் எனக் கூறப்படும் கௌதமபுத்திர சாதகர்ணி காலத்துக்குரிய நாணயம் ஒன்று வல்லிபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதே பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொற்சாசனம் கூட ஆந்திரத் தொடர்பை வலியுறுத்துவதாக உள்ளது. இச்சாசனத்தின் மொழி, கருத்து என்பதையிட்டு முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டாலும் இதன் வரிவடிவங்கள் சமகால ஆந்திர வரிவடிவங்களை ஒத்துக் காணப்படுகிறது. பொலநறுவை மாவட்டத்தில் உள்ள துவிகல என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டில் கைப்பிடியுடன் சங்கால், நந்திபாதம் கொண்ட சித்திரம் காணப்படுகிறது. இவை போன்ற சித்திரங்கள் அதே காலப் பகுதிக்குரிய ஆந்திர நாணயங்களிலும் காணப்படுகின்றது. இதனால் இக்கல்வெட்டு ஆந்திர வணிகன் ஒருவனால் எழுதப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமளிக்கிறது. சுன்னாகத்திற்குக் கிட்டவுள்ள கந்தரோடை என்ற இடத்தில் கி. பி. 3-ம், 4-ம் நூற்றாண்டுக்குரிய முத்திரை கண்டுபிடிக்கப்பட்டது. 'விஸ்ணுபூதியஸ்' என்ற பெயர் பொறித்த இம்முத்திரை ஆந்திர வணிகன் ஒருவனுக்குரியதெனவும் கூறப்படுகிறது. இச்சான்றுகளை எல்லாம் நோக்கும்போது வரலாற்றுக்கால ஆரம்பத்தில் இருந்து கி. பி. 4-ம் நூற்றாண்டுவரை இலங்கையில் ஆந்திரப் பண்பாட்டுச் செல்வாக்கு இடம்பெற இவ்வர்த்தகத் தொடர்புகளே காரணம் எனக் கூறலாம்.

## இலங்கை — ஆந்திர பௌத்த மத உறவுகள்

இலங்கை வரலாற்றில் பௌத்த மதத்தின் அறிமுகத்துடன் புதிய பண்பாட்டுச் சக்திகள் தோன்றி வளர்வதனை அவதானிக்கலாம். பௌத்த மதம் சார்ந்த கட்டிட சிற்ப ஓவியக் கலைகள் தோற்றம் பெறவும், பௌத்த சிங்களப் பண்பாடு உருவாகவும் இம்மதம் இங்கு குறுகிய காலத்தில் அரச ஆதரவுடன் மக்கள் மத்தியில் பரவலான செல்வாக்கைப் பெற்றதே காரணமாகும். புராதன இலங்கையில் இம்மதம் செல்வாக்குப் பெற்ற அதே காலகட்டத்தில் தென்னிந்தியாவில் சிறப்பாக ஆந்திராவில் இம் மதம் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. ஆனால் பௌத்த மதத்தின் அறிமுகத்தையும், அதன் வளர்ச்சியையும் வட இந்திய அரசுகளுடன் தொடர்புபடுத்திக் கூறும் பாளி இலக்கியங்களும், வரலாற்று ஆசிரியர்கள் பலரும் சமகாலத்தில் ஆந்திராவுடன் கொண்டிருந்த தொடர்பை முக்கியப்படுத்திக் கூறவில்லை.

தேவநம்பியதீசன் அநுராதபுரத்தை ஆண்ட காலத்தில் (கி. மு. 247) மௌரிய மன்னன் அசோகனது மகன் மகிந்தனும், மகள் சங்கமித்திரையும் இலங்கைக்கு அனுப்பப்பட்டமையே பௌத்தமதம் இலங்கையில் பரவக் காரணம் எனக் கூறப்படுகிறது. (M. V. xii. 15); ஆனால் இக் காலத்திற்கு முன்னரே இம்மதம் இலங்கையில் பரவியதற்குச் சான்றுகள் சில உள. அசோகன் ஆண்ட காலத்தில் கூட இம்மதம் இலங்கையில் பரவினாலும்கூட அம்மதம் நேரடியாக வடஇந்தியாவில் இருந்து பரவியதா அல்லது அசோகன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஆந்திரப் பிரதேசத் தொடர்பால் பரவியதா என்பதில் கருத்து முரண்பாட்டிற்கு இடமுண்டு. பாளி இலக்கியங்கள் தவிர்ந்த ஏனைய சான்றுகளை நோக்கும்போது ஏனைய பண்பாட்டுச் சக்திகளைப்போல் பௌத்த மதமும், பௌத்த பண்பாடும் தென்னிந்தியத் தொடர்பால் சிறப்பாக ஆந்திரச் செல்வாக்கால் பரவியதென்ற முடிவுக்கு வரமுடிகிறது.

அசோகன் ஆட்சியில் பௌத்த மத செல்வாக்கிற்கு உட்பட்ட இடங்களில் ஆந்திரப் பிரதேசமும் ஒன்று என்பதை அவன் ஆட்சிக் கால சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இக்கால மன்னர்கள் அரசியல், பொருளாதார ரீதியாக இம்மதத்திற்கு ஆதரவு கொடுத்ததினால் குறுகிய காலத்தில் இப் பிரதேச சமூக கட்டமைப்பில் ஆழமாகவும் பரவலாகவும் பௌத்த மதம் செல்வாக்குப் பெற முடிந்தது. இவற்றை அமராவதி, நாகர்ஜுனகொண்டா, பட்டிப்புரோலு போன்ற இடங்களிலுள்ள பௌத்த கல்விமையங்கள், கலைக்கூடங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்விடங்களில் காணப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் சில புத்தபிரானின் விசுவாசமிக்க பௌத்த குருமார் பௌத்த யாத்திரிகர்களுக்கும், பக்தர்களுக்கும் அறிவூட்டும் பணியில் ஈடுபட்டதாகக் கூறுகிறது. (கிருஸ்ணமூர்த்தி, கே. ப. 12) இவற்றை நோக்கும்போது இம்மதப் பிரசாரம் உள்நாட்டு மக்களுக்கு மட்டுமன்றிப் பிற நாடுகளில் இருந்து வந்த பௌத்தர்களுக்கும் போதிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இவ்இடங்களுடன் இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்புகளைக் கொண்டிருந்ததனால் கூடவே பௌத்த மதக் கருத்துக்களும்

இலங்கைக்குப் பரப்பப்பட்டிருக்கலாம். வட இந்தியாவில் அமைந்த மௌரியத் தலைநகருடன் இலங்கை கொண்டிருந்த நேரடித் தொடர்பே இலங்கையில் பௌத்த மதம் பரவக் காரணம் எனக் கூறும் வால்பொல ராகுல தேரோ இலங்கையில் காணப்படும் அசோக பிராமி வரிவடிவங்களையும் பிராகிருத மொழியில் உள்ள சாசனங்களையும் அதற்குச் சான்றாக எடுத்துக் காட்டுகிறார். (Rahula, W. 1966, p. 61) ஆனால் இக்காலத்தில் தமிழ்நாடு தவிர்ந்த இந்தியாவின் பெரும்பாலான பிரதேசங்களில் அசோக சாசனங்களே பயன்படுத்தப்பட்டன. எனவே இச்சாசனங்கள் வடஇந்தியத் தலைநகரங்களில் இருந்து இலங்கைக்கு அறிமுகமாகியதைவிட அயலில் உள்ள ஆந்திராவில் இருந்து பரவுவதற்குக் கூடுதலான வாய்ப்பு இருந்திருக்கும். அத்தோடு பௌத்த மதத்தைப் பிற இடங்களுக்குப் பரப்பக் காரணமாக இருந்த அசோகன் அதற்குத் தர்மமகாமாத்திரர் என்ற நிர்வாகப் பிரிவை அமைத்திருந்தான். ஆனால் அவனுடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தவன் எனக் கூறப்படும் இலங்கை மன்னன் தேவநம்பியதீசன் அதுபோன்ற ஒரு நிர்வாகப் பிரிவை இலங்கையில் ஏற்படுத்தியமைக்கு எதுவித சான்றுகளும் இல்லை. அசோகன் தனது பௌத்த மதக் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக்கூறப் பாறைகளிலும் கற்றூண்களிலும் பல வரி கொண்ட சாசனங்களைப் பொறிப்பித்தான். ஆனால் இலங்கையில் இது போன்ற சாசனங்கள் காணப்படவில்லை. மாறாக ஆந்திராவை ஒத்த பௌத்த குகைகளும் சாசனங்களுமே இலங்கையில் காணப்படுகிறது. இவ்வொற்றுமைகள் இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கும் பிற்காலத்தில் இம்மதம் தீவிரமாக வளர்வதற்கும் ஆந்திரத் தொடர்பே காரணம் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

மௌரியப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அதன் சிற்றரசர்களாக இருந்த சாதவாகன வம்சம் கி. மு. 3-ம் நூற்றாண்டின் இறுதியில் ஆந்திராவில் சுதந்திர அரசாக எழுச்சியடைந்தது. இவ்வரசுதான் மௌரியர் ஆட்சியைத் தொடர்ந்து இந்தியாவில் பௌத்த மதத்தைப் பாதுகாத்து அம்மதத்தை அயல் நாடுகளுக்குப் பரப்பிய அரசாக விளங்கியது. இக்கால கட்டத்தில் இலங்கை ஆந்திராவுடன் நெருங்கிய வர்த்தக உறவு கொண்டிருந்ததினால் அதன் தொடர்பால் தேரவாத பௌத்த மதம் அநுராதபுரத்தில் மகாவிகாரையைத் தலைமைப் பீடமாகக் கொண்டு வளர்ச்சிபெற முடிந்தது. இவ்வுறவு பௌத்தத்தின் இன்னொரு பிரிவான மகாயான பௌத்த ஆந்திராவில் எழுச்சியடைந்தபோது மேலும் நெருக்கமடைந்தது. இம்மதப் பிரிவு கி. மு. 2 ம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் தோன்றினாலும் சாதவாகனர் ஆட்சியில்தான் ஆந்திராவில் இதன் கோட்பாடு முதன் முறையாக வரையறை செய்யப்பட்டது. இதற்கு அஸ்வகோசர், நாகர்ஜுனர் போன்றோர் காரணமாக இருந்தனர். இவர்களுள் நாகர்ஜுனருக்கும் இலங்கை மன்னன் ஒருவனுக்கும் மகனாகப் பிறந்த ஆரியதேவனுக்கும் இடையே ஏற்பட்ட உறவால் இம்மகாயான பௌத்த மதம் இலங்கையில் தீவிரமாகப் பரவியது. (Paranavitana, S. 1957, p. 35). பரணவிதான வட்டகாமினி காலத்தில் (கி. மு. 104) இம்மதம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டாலும், அது தீவிரமாக வளர்ச்சியடைய ஆந்திராவில் வாழ்ந்த நாகர்ஜுனரே காரணம் என்றார். (Ibid) சீன யாத்திரிகரான யுவான் சுவாஸ் தனது நூலில் ஆரியதேவர் நாகர்ஜுனரைச் சந்தித்தபோது ஆரியதேவரின் புகழைக் கேட்டு எனக்குப் பின் என் அணையா விளக்கைக் காக்

கும் பொறுப்பை உன்னிடம் தருகிறேன் எனக் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார். (நீலகண்டசாஸ்திரி, K. A., 1966, p. 107) இவரே நாகர்ஜுனர் எழுதிய மாத்திய மகாகாரிகாவுக்கு உரை விளக்கம் எழுதியதுடன் சது சதக(ம்) முதலிய நூலையும் எழுதினுர். இந்நூல்கள் இலங்கைப் பௌத்தர்களால் பெரிதும் மதிக்கப்பட்டது.

சாதவாகனரைத் தொடர்ந்து கி. பி. 3-ம் நூற்ருணடில் ஆட்சிக்கு வந்த இஷ்வாகு வம்ச காலத்தில் ஆந்திராவின் மகாயான பௌத்த மத செல்வாக்கு இலங்கையில் தீவிரமடைந்தது. இம்மதக் கருத்துக்கள் 'மக்களைப் பெரிதும் கவர்ந்ததால் இலங்கையுட்படப் பல நாடுகளில் இருந்து பௌத்த யாத்திரிகர்கள், பௌத்த கல்விமான்கள் ஆந்திரா சென்று அங்குள்ள பௌத்த ஆலயங்களைத் தரிசித்தனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட கி. பி. 3-ம் நூற்ருண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று பௌத்த கல்வியை கற்பதற்காக பௌத்த யாத்திரிகர்கள் தமிலா (தமிழ்நாடு), ஒட்ரா (கலிங்கம்), தம்ப பண்ணி (இலங்கை) போன்ற இடங்களில் இருந்து வந்ததாகக் கூறுகிறது. இங்கு கண்டெடுக்கப்பட்ட மற்ருெரு கல்வெட்டு இலங்கைப் பௌத்தர்களுக்காக நாகர்ஜுனகொண்டாவில் போதிசிறி என்ற பெண் சிகள விகாரையைக் கட்டியதாகக் கூறுகிறது. (Wijayasekara, N. 1962, p. 99) இதன் மூலம் இலங்கைப் பௌத்தர்களின் வருகை ஆந்திராவில் அதிகரித்திருந்தமை புலனுகின்றது. ஆயினும் கி. பி. 4-ம் நூற்ருண்டில் இஷ்வாகு வம்சம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து பௌத்த மதமும், பௌத்த கலையும் வீழ்ச்சியடைந்தது. இதனுல் இப்பிரதேசத்துடனுன இலங்கை தொடர்பு குறைவடைந்து தென்னிந்தியாவின் இன்னுெரு பிரதேசமான தமிழ்நாட்டுடனுன பௌத்த மத உறவு வலுவடைந்தது.

## இலங்கையில் ஆந்திர சிற்பக்கலை மரபு

இலங்கையின் பௌத்த சிற்பக்கலை மரபை ஆராய்ந்த கலைவரலாற்று ஆசிரியர்கள் பலரும் வடஇந்தியாவில் இருந்து பௌத்த மதம் இலங்கையில் பரவியபோது கூடவே மௌரிக்கலை மரபும் இலங்கைக்கு அறிமுகமாகியதாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆனுல் மௌரியர் ஆட்சியில் பௌத்த ஸ்தூபிகள், விகாரைகள், சைத்திய மண்டபங்கள் அமைக்கப்பட்டதாகப் பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டாலும் அவை பற்றிய முழுமையான சான்றுகள் இன்றும் சரிவர அடையாளம் காணப்படவில்லை. மௌரியர் ஆட்சியைத் தொடர்ந்து கி. மு. 2-ம், 1-ம் நூற்ருண்டுகளில் தான் பெரும் பௌத்த கலைப்படைப்புகள் என்று கூறக்கூடியவை சுங்கர், ஆந்திரர் ஆட்சியில் பாரூட், சாஞ்சி, புத்தகாயா, அமராவதி, நாகர்ஜுன கொண்டா போன்ற இடங்களில் தோன்றி வளர்ந்தன. இலங்கையிலும் காலத்தால் முந்திய பௌத்த கட்டிட சிற்பக் கலைகள் கி. மு. 2-ம் 1-ம் நூற்ருண்டுகளில்தான் தோன்றி வளர்ந்தன. (சிவசாமி, வி. 1978. ப. 104) இதனுல் இலங்கையின் பௌத்த கலை மரபின் நேரடித்தொடர்பால் தோன்றியதென்பதை விடப் பெஞ்சமின் ரேலன் (Roland, B. 1953, p. 209), கோகாட் (Hocord, A. M. 1924 – 28, p.95) கூறியது போல ஆந்திரக்கலை மரபின் செல்வாக்கால் தோன்றியதெனக் கூறுவதே பொருத்தமாகும்.

ஆரம்பத்தில் இலங்கையில் காணப்பட்ட பெரும்பாலான பௌத்த சிற்பங்கள் ஆந்திராவுக்குரிய ஒருவகைப் பளிங்கு, சுண்ணாம்புக்கல் முதலியவற்றால் ஆக்கப்பட்டிருந்தது. இதனால் இச்சிற்பங்கள் முதலில் ஆந்திராவில் ஆக்கப்பட்டு, பின்னர் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதெனக் கூறலாம். இதுபற்றிப் பரணவிதான (Paranavitana, S. 1936, p. 17) குறிப்பிடுகையில்,

> "அமராவதியிலும் நாகர்ஜுனகொண்டாவிலும் உள்ள ஸ்தூபிகளை அலங்கரிக்கும் சிற்பங்களை உருவாக்கிய சிற்பிகள் பௌத்தர்களுடைய வழிபாட்டிற்காகப் பெருமளவில் கலைப்பொருட்களை உருவாக்கியிருக்க வேண்டும். இத்தகைய கலைப்பொருட்கள் பல இலங்கை திரும்புகின்ற சிங்கள யாத்திரிகர்களினால் அல்லது அநுரதபுரத்தைத் தரிசிக்க வந்த பௌத்தர்களினால் கொண்டுவரப்பட்டிருக்கலாம். ஆரம்பத்தில் இவ்வாறு கொண்டுவரப்பட்டாலும் பின்னர் இலங்கையில் இருந்து ஆந்திரா சென்ற சிற்பிகள் ஆந்திரக்கலை மரபில் சிற்பங்களை ஆக்கப் பழக்கப்பட்டிருக்கலாம். பின்னர் அந்நாட்டுக்குரிய பளிங்கு சுண்ணாம்புக்கற்களை இலங்கையில் இறக்குமதி செய்து இலங்கையிலேயே சிற்பங்களை வடித்திருக்கலாம். இதற்குச் சிலவேளை ஆந்திரச் சிற்பிகளே இங்குவந்து உதவியிருக்கலாம்"

என்றார்.

இவ்வாறான சிற்பங்களை இலங்கையில் காலத்தால் முந்திய கண்டக சேத்தியம், தக்கண தூபி, மகா தூபி என்பனவற்றில் சிறப்பாகக் காணலாம். இத்தூபிகளின் வாகல்கடம், தூண்கள், அவற்றின் தலைப்பகுதி, கைப்பிடிச்சுவர்கள், வேதிகைகள், கும்மட்டப்பகுதிகள் என்பனவற்றில் புடைப்புச் சிற்பங்களாகவும், தனிச் சிற்பங்களாகவும் பல உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கற்பக விருட்சம், பூரணகும்பம், தாமரைப் பூ, மிருகங்கள், பறவைகள், தர்மசக்கரம், புத்தர் திருவடி என்பன சமகால ஆந்திரத் தூபிகளில் காணப்பட்ட சிற்பங்களுடன் தொழில்நுட்பம், பாணி அமைப்பு என்பனவற்றில் நெருங்கிய ஒற்றுமைத்தன்மை கொண்டு காணப்பட்டன. இதனால் ஆந்திரக்கலை மரபுக்குரிய கிளை ஒன்று இலங்கையில் தோன்றி வளர்ந்திருக்க வேண்டும் என்பது பரணவிதானவின் கருத்தாகும். (Paranavitana, S. 1971, p. 13)

ஆந்திராவில் மகாயான பௌத்தம் எழுச்சியடைந்தபோது புத்தர், போதிசத்துவர்களை மனித வடிவில் சிற்பங்களாக ஆக்கும் முறை தோன்றியது. இதனால் இதுவரை ஸ்தூபிகளை அலங்கரித்த புத்தரது ஞாபகச் சின்னங்களுக்குப் பதிலாக அவரது வாழ்க்கையில் நடந்த பல்வேறு அற்புதங்களையும், பௌத்த மதக் கோட்பாடுகளையும் புலப்படுத்த மனித, தெய்வ, மிருக உருவங்கள் படைக்கப்பட்டன. இவை சமகாலத்தில் இலங்கைப் பௌத்த கலை மரபிலும் மாறுதல்களை ஏற்படுத்தின. இவ்வாறான சிற்பங்களுள் நாக, நாகினி, துவாரபாலகர் சிற்பங்கள் ஆந்திர இலங்கை சிற்பக் கலை உறவிற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

இக்கலைச் சின்னங்கள் உலகில் தொன்மையான வழிபாடுகளுள் நாக வழிபாடும் ஒன்றாகும் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இந்தியாவுக்கு ஆரியர்

வருவதற்கு முன்பாகவே இங்கு வாழ்ந்த திராவிட மக்களிடம் இத்தகைய வழிபாடு இருந்ததற்கான தடயங்கள் சிந்துவெளியில் இருந்ததாகக் கூறப் படுகின்றது. (Fergusson, J. F. 1873. p.244) இலங்கையிலும் பௌத்த மதம் பரவுவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த ஆதிஒஸ்ரலோயிட், திராவிட மக் களிடம் இவ்வழிபாடு நிலைத்திருந்ததற்கான சான்றுகள் உள.

தென்னாசியாவின் ஆதியான இவ்வழிபாடு காலப்போக்கில் இந்துக் கடவுளரோடு சங்கமித்ததென்பதற்குச் சிவன் நஞ்சுண்டவனாகவும், பாம்பு மாலையை அணிந்தவனாகவும், விஷ்ணு ஆதிசேஷனில் அறிதுயில் கொள்பவ னாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளமை சான்றுகளாகும். அதுபோலவே பௌத்தத்திலும் இந்த அம்சம் பிற்காலத்தில் இணைந்து கொண்டதென்ப தைப் பௌத்த ஆலயங்களில் வரும் நாக, நாகினி உருவங்களுடன் பாம்பு உருவம் காணப்படுவதைக் கொண்டு அறியலாம். ஆனந்தக் குமார சுவாமி மனிதரீ மதம் சார்ந்த இக்கலைகள் பௌத்த தலங்களில் துவார பாலகராக அமைக்கப்பட்டமை பௌத்தம் அடைந்த வெற்றிக்குச் சிறந்த அறிகுறியாகும் என்பர். (குமாரசுவாமி, ஆனந்த., 1980. ப. 62)

இவ் ஆதி வழிபாடு பற்றிப் பிரமாணங்களிலும், இதிகாசங்களிலும் குறிப்பிடப்பட்டாலும் ஆரம்ப காலக் கலை வடிவங்கள் பௌத்த ஆலயங்க ளிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவை பௌத்த ஆலயங்க ளில் தனித்தும் பல இடங்களில் மனித தெய்வ உருவங்களுடன் இணைந் தும், பௌத்த மதத்திற்குச் சேவை செய்பவர்களாக, பௌத்த மதத்தைப் பூசிப்பவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இவை பாம்பின் உருவத்தில் இருந்தாலும் எந்த நேரத்திலும் எந்த வடிவத்தையும் எடுக்கும் தன்மை வாய்ந்தவையாகும். வடமொழியில் நாகர்கள் பாம்பாகவும், யானையாகவும் கொள்ளப்படுகின்றனர். பாம்பு வேதகாலத்தில் முகிலாகவும் உருவகிக்கப்பட்டுள்ளது. இவை பல அழிவு களை ஏற்படுத்தக் கூடியவையாகக் கருதப்பட்டாலும், கிழும் மேலும் உள்ள நீர்நிலைகளைக் காப்பவையாகவும் கருதப்பட்டன.

இலங்கையில் இப்புராதன கலை வடிவங்கள் அநுராதபுரத்தில் உள்ள துபாராம, கண்டகசேத்திய, ஜெதவனாராம, அபயகிரி ஆகிய தாதுகர்ப் பங்களின் வாசல் பகுதியின் இருமருங்கிலும் கைபிடிச் சுவர்களின் முடிவி லும் தனிச் சிற்பங்களாகவும் புடைப்புச் சிற்பங்களாகவும் காணப்படுகின் றன. பெரும்பாலான நாக உருவங்கள் மிருக வடிவில் இருந்தாலும் சில இடங்களில் மனித வடிவில் 3, 5, 7, அல்லது 9 பாம்புத் தலைகள் கொண்ட நாகபாம்பு மனிதத் தலையின் பின்னால் இருந்து மேல் எழுவனவாகச் சித்த ரிக்கப்பட்டுள்ளன. அபயகிரி தாதுகர்ப்பத்தில் மனித உருவில் உள்ள நாகினியின் பின்னிருந்து ஐந்து தலை கொண்ட பாம்பு ஒன்று மேலெழுவ தாக உளது. இவ்வுருவம் நிற்கும் நிலையில் கலைரசனைக்குரியதாக வலதுபக்க இடுப்புச் சரிந்து காணப்படுகின்றது. உடலின் பாரத்தை வலது பாதம் தாங்கிக் காணப்படுவதால் முழங்கால் வளைந்து காணப்படுகின்று. உள்ளங்கையில் பூக்கள் நிறைந்த பூரணகும்பம் காணப்படுகின்றது. இந்நிலை செழிப்பு வளர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்துகிறதெனலாம். இன்னொரு சிற்பத்தில் நாக அரசனின் கீழ்ச் சிறிய உருவம் ஒன்று அவனின் காலால் மிதிக்கப்பட்டுக் காணப்படுகின்றது. தீயசக்திகளை நசுக்குவதாக இந்நிலை உணர்த்துகிறது எனலாம்.

ஆனந்தக்குமாரசாமி இந்த நாக நாகினிச் சிற்பங்கள் பாரூட், சாஞ்சி கலைமரபின் சாயலை ஒத்துக் காணப்படுகின்றதெனக் குறிப்பிட்டுள்ளார். (Coomaraswamy, A. K., 1927, p. 162) ஆனால் பாரூட், சாஞ்சி கலைமரபில் இவ்வுருவங்கள் பெரும்பாலும் மனித வடிவில் உள்ளன. இவை நாக, நாகினி வடிவம் என்பதை இவ்வுருவங்களுக்குக் கீழே நாகர்கள் என எழுதப்பட்டதைக் கொண்டே அடையாளம் காண முடிகிறது. (Parker, H., 1909, p. 15) ஆனால் இலங்கையிலும் ஆந்திராவிலும் மனித உருவங்களின் பின்னால் இருந்து நாகத்தலைகள் விரிந்து மேலெழுவதாக உள்ளன. பாரூட், சாஞ்சி மனித சிற்பங்களில் சில நாக உருவங்களுடன் இணைந்து காணப்பட்டாலும் அம்மனித உருவங்கள் தடித்தும், அசைவுத் தன்மை அற்றதாகவும் காணப்படுகின்றன. (Zemmer, H., 1955, p. 35) ஆனால் இலங்கையிலும் ஆந்திராவிலும் இவ்வுருவங்கள் மெல்லியதாகவும் அசைவுத் தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றன.

பெஞ்சமின் றோலண்ட் கலைநயம் பொருந்திய இச் சிற்பங்கள் அமராவதிக் கலைமரபை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் ஆக்கப்பட்டதாகக் கூறினாலும் இவற்றில் காணப்படும் பல ஆபரணங்களும் தலையலங்காரங்களும் குப்தர் கலை மரபுக்குரிய கலைப்பாணியைப் பிரதிபலிக்கின்றன எனக் கூறியுள்ளார். (Roland, B. p. 216). ஆனால் ஜெதவனராம, கண்டகசேத்திய தாதுகர்ப்பங்களிலும் காணப்படும் இவ்வுருவங்களின் உடற்கூற்றையும் அலங்காரத் தன்மையையும் நோக்கும்போது இவை அப்படியே அமராவதிக் கலைப்பாணியை நினைவுபடுத்துவனவாக உள்ளன.

சில இடங்களில் இந்த நாகபாம்பின் உருவம் துவாரபாலகர் சிற்பங்களுடன் இணைந்து காணப்படுகின்றது. இதற்கு அநுராதபுரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட நாகசிற்பம் சிறந்த சான்றாகும். சாதாரண மனித வடிவில் இருந்து வேறுபட்ட இவ்வடிவம் தடித்த உருவமும் பானை போன்ற வயிறும் கொண்ட குள்ள வடிவில் காணப்படுகின்றது. பெரும்பாலும் இந்துக் கோயிலின் கருவறையின் வாசற்பகுதியில் காணப்படுகின்ற இவை இலங்கை ஆந்திரப் பௌத்த ஆலயங்களில் நாக உருவத்துடன் இணைந்து காணப்படுகின்றன. வின்சன் சிமித் இலங்கையில் இவ்வாறான சிற்பங்கள் பாதாமிச் சாளுக்கிய கலை மரபுடன் ஒற்றுமைத் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன என எடுத்துக் காட்டியுள்ளார். (Smith, V. A. 1911, p. 132) ஆனால் இலங்கையில் உள்ள இக்கலை வடிவங்கள் ஆந்திராவுக்குரிய ஏனைய கலைமரபுகளுடன் இணைந்து காணப்படுவதோடு கலை ரீதியாகவும் ஆந்திரக் கலைமரபை ஒத்துக் காணப்படுவதால் இவையும் ஏனைய சிற்பங்களைப் போல் ஆந்திரச் செல்வாக்கால் தோன்றியதெனக் கூறலாம். இச் சிற்பத்தின் இன்னொரு வடிவமான கணங்கள் அமராவதி ஸ்தூபியில் புடைப்புச் சிற்பங்களாகவும் தனிச் சிற்பங்களாகவும் ஆக்கப்பட்டுள்ளன. இவற்றைத் துவாரபாலகர் சிற்பத்தின் முன்னோடி வடிவம் எனக் கூறலாம். இதையொத்த வடிவங்கள் இலங்கையில் இசுறுமுனிய போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களில் காணப்படுகின்றன.

மனித தெய்வ உருவங்களுடன் இணைந்து காணப்பட்ட நாகபாம்பின் உருவம் சில இடங்களில் பல தலைகொண்ட தனி உருவமாகவும் காணப்படுகின்றது. இது நாக வழிபாடு பிற்காலத்தில் தனியொரு வழிபாடாக

வளர்ச்சிபெற்றதைக் குறிக்கிறது எனலாம். இதற்கு ஜேதவனராமயில் கண்டெடுக்கப்பட்ட கி. பி. 2-ம் 3-ம் நூற்றாண்டுக்குரிய சிற்பம் சிறந்த உரைகல்லாகும். ஆந்திராவுக்குரிய ஒருவகைப் பளிங்குக் கல்லால் செய்யப்பட்ட இச்சிற்பத்தை நோக்கும்போது இது ஆந்திராவில் செய்யப்பட்டுப் பின் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டதெனக் கருதலாம்.

பலதரப்பட்ட மதங்களைப் பின்பற்றிய மக்களின் கலைரசனைக்குரிய பொருளாக இருப்பது புத்தர் சிலைகளாகும். இவை பௌத்த மதத்தின் முக்கிய வழிபாட்டுப் பொருளாக மட்டுமன்றி, சிற்பக் கலையின் முக்கிய கவின்கலைப் பொருளாகவும் காணப்படுகிறது. இலங்கையில் இச்சிலைகள் இருக்கும் நிலையிலும், நிற்கும் நிலையிலும், கிடக்கும் நிலையிலும் காணப்படுகின்றன. இவற்றுள் இருக்கும் நிலையிலான சிலைகளே இலங்கையில் கூடுதலாகக் காணப்படுகின்றன. ஆந்திராவில் மகாயான பௌத்த மதம் அடைந்த வளர்ச்சியைத் தொடர்ந்து கி. பி. 1-ம் 2-ம் நூற்றாண்டுகளில் இச்சிற்பங்களை ஆக்கும் மரபு தோற்றம் பெற்றாலும் இலங்கையில் இதன் தோற்றம் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆனந்தக்குமாரசுவாமி இலங்கையின் காலத்தால் முந்திய இச்சிலைகள் ஆந்திராவுக்குரிய ஒருவகைப் பளிங்குக் கல்லால் ஆக்கப்பட்டிருப்பதால் அங்கிருந்தே இவை கொண்டுவரப்பட்டதாக இருக்கவேண்டும் என்கிறார். (குமாரசுவாமி, ஆனந்த. 1980). ஆனால் கொடகும்பர கல்லாலான புத்தர் சிலைகள் கி. பி. 2-ம் நூற்றாண்டில் இருந்து கிடைத்தாலும் இதற்கு முன்பே இவரது உருவங்கள் இலங்கையில் மரம், களிமண், உலோகம், செம்பு, பொன், சுடுமண் முதலியவற்றால் ஆக்கப்பட்டிருந்ததென்றும், இவையே இலங்கையில் சுயமாக புத்தர் சிலை தோன்ற முன்னோடி வடிவங்களாக அமைந்தன என்றும் கூறுகிறார். (Godakumbara, L. E., Vol. xxvi p. 230). ஆனால் எமக்குக் கிடைக்கும் காலத்தால் முந்திய புத்தர் சிலை சம்பந்தமான தொல்பொருள் சான்றுகள் பெரும்பாலும் ஆந்திராவுக்குரிய ஒருவகைப் பளிங்குக் கல்லால் ஆக்கப்பட்டிருப்பதோடு அதன் தொழில்நுட்பம், பாணி அமைப்பும் ஆந்திரக் கலைமரபை ஒத்திருப்பதால் இலங்கையின் ஆரம்ப கால புத்தர் சிலைகள் ஆந்திராவில் இருந்தே கொண்டுவரப்பட்டன எனக் கூறலாம். இவ்வாறான சிலைகள் பெருமளவுக்கு அநுராதபுர நகரைச் சுற்றியே காணப்படுகின்றன. இவற்றுள் ருவான்வெலிசாய தாதுகோபத்தில் உள்ள நிற்கும் புத்தர் சிலையும் அதற்கு அண்மையில் உள்ள காட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இருக்கும் நிலையில் உள்ள புத்தர் சிலையும் சிறந்த சான்றாகும். இவ்விரு சிலைகள் பற்றி ஆனந்தக்குமாரசுவாமி குறிப்பிடுகையில் இவற்றின் பிரமாண்டமான வடிவங்கள், பௌத்த அறநெறியின் விழுப்பமும் அடக்கமான உணர்ச்சியோடு வெளிப்படுத்தும் தன்மையும், சிற்பியின் தனித்தன்மையையோ, சாதுரியத்தையோ பிரபலப்படுத்தாத கொள்கையும் அமராவதி புத்தர் சிலைகளிலும் உண்டு என்றார். (குமாரசுவாமி, ஆனந்த., ப. 68).

அண்மையில் ஈழத்துச் சிற்பக் கலைபற்றி ஆராய்ந்த பரணவிதான அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆந்திரக் கலைமரபுக்குரிய மூன்று புத்தர் சிலைபற்றிக் குறிப்பிட்டுள்ளார். (Paranavitana, S., 1936, p. 17) இம்மூன்று சிலைகளும் இருக்கும் நிலையில் அமைந்து காணப்படுகின்றன. ஆந்திராவுக்குரிய பளிங்குக் கல்லால் ஆக்கப்பட்ட முதலாவது புத்தர்

சிலை 4½ அங்குல உயரமுடையது. தியான முத்திரைக் கைகளுடன் யோகநிலையில் வீற்றிருக்கும் இச்சிற்பத்தின் கீழ் எதுவித ஆசனமும் இல்லை. அதற்குப் பதிலாக, சிற்பத்தைச் சுற்றி அலைபோன்ற கோட்டினை நெளியலாகக் காணலாம். இது பாயாக அல்லது மடித்துப் போடப்பட்ட துணியாக இருக்கலாம். சாந்தமும் கருணையும் பொருந்திய இச்சிற்பத்தின் தலைப்பாகை தலைமயிர், முகபாவம், ஆடை அணியப்பட்டுள்ள விதம் என்பன அப்படியே ஆந்திர சிற்ப முறையினை ஒத்துள்ளது. 2⅞ அங்குல உயரமுடைய இரண்டாவது புத்தர் சிலை முதலாவது சிலையைப் போலத் தியான நிலையில் உள்ளது. இச்சிற்பத்தின் பல்வேறு பாகங்கள் சிதைவடைந்துவிட்டமையினால் இவற்றின் சிறப்பம்சங்களை அதிகம் விரிவாக்கிக் கூறமுடியாதுள்ளது. மூன்றாவது புத்தர்சிலை 4⅞ அங்குல உயரமுடையது. ஒரு மரத்தின் கீழ் சிம்மாசனத்தில் மெத்தைமீது புத்தர் அமர்ந்திருப்பதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. அவருடைய தலையைச் சுற்றி ஒளிவட்டம் காணப்படுகிறது. சிலையின் வலது பக்கத்தில் ஒரு தெய்வீக வடிவம் கையில் சாமரை பிடித்துக்கொண்டு காற்றிலே மிதப்பதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. (Ibid) இச்சிற்பத்தின் சில பாகங்கள் உடைந்தபோதிலும் இவற்றை ஆக்குவதற்குக் கையாண்டிருக்கும் தொழில்நுட்பத் தன்மை ஆந்திர அமைப்பினை நினைவுபடுத்துகிறது.

இலங்கையில் உள்ள காலத்தால் முந்திய புத்தர் சிலைகளுள் 1946-ம் ஆண்டு மகாஇலுப்பளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நிற்கும் நிலையிலான புத்தர்சிலை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. ஆந்திரப் பிரதேசத்துக்குரிய ஒருவகைப் பளிங்குக் கல்லால் ஆக்கப்பட்ட இச்சிலையின் உயரம் 6 அடியாகும். இடதுகை அபய முத்திரையுடன் காணப்படும்போது வலதுகை போர்த்தப்பட்ட காவி உடையினை நெஞ்சுடன் அணைத்தபடி பிடித்துக்கொண்டிருக்கிறது. (Paranavitana, S., 1936 : ப.17) வலதுகையின் மேலால் மடிக்கப்பட்ட காவிஉடை மீண்டும் பாதம் நோக்கி வந்து பாதத்திற்குச் சற்று மேல்நோக்கித் தொடங்கும் காவி உடைக்குச் சமமாக நிற்கிறது. காவிஉடையின் மடிப்புக்கள் தெளிவாகத் தெரிகிறது. சிலையின் நெற்றியில் காணப்படும் உர்ணம் (திலகம்) சிங்கள சிற்பிகளால் ஆக்கப்பட்ட சிலைகளிலே இடம்பெறாத அமராவதிப் பாணியை ஒத்துக் காணப்படுறது. இதையொத்த சிலைகள் நாகர்ஜுனகொண்டாவில் காணப்பட்டாலும் அதைவிட இச்சிலை சிறந்ததாகும். (இந்திரபாலா. கா., 8–8–68) பொதுவாக இச்சிற்பத்தின் பாணியமைப்பு, உடையின் மடிப்புக்கள், எல்லையற்ற ஞானம், எல்லையற்ற கருணை, நிர்வாண நிலையிலுள்ள களங்கமற்ற அமைதி என்பன கி. பி. 2-ம் நூற்றாண்டு ஆந்திரக் கலைமரபினை நினைவுபடுத்துகின்றது (Wijesekara, N, 1962. p. 56) பிற்பட்ட ஆந்திரக்கலை மரபைச் சேர்ந்த புத்தர் சிற்பம் ஒன்று அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டுத் தற்பொழுது கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. யோகநிலையில் காணப்படும் இச்சிலை 5 அடி 4 அங்குலம் உயரமுடையது. இதன் உடல் அமைப்புக் காவி உடையின் மடிப்புக்கள் கி. பி. 2-ம் நூற்றாண்டுக்குரிய அமராவதிக் கலைமரபுச் சாயலைக் கொண்டுள்ளது. (Ibid)

தமிழ் மக்களின் ஒரு சிறுபகுதியினர் வரலாற்றுக் காலத்தின் தொடக்கப் பகுதியில் பௌத்தர்களாகவும், பௌத்தத்தை ஆதரிப்போர்களாகவும் இருந்திருக்கலாம் என்பதற்கு இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்

களில் காணப்பட்ட பௌத்த சின்னங்கள் சான்றுகவுள்ளன. இப்பிராந்தியங்களில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தமிழ் குடியேற்றங்கள் காணப்பட்டதுடன் முக்கிய புராதன சைவ ஆலயங்களும் காணப்பட்டன. (சிற்றம்பலம், சி. க, 1984, ப. 111) இங்குள்ள கந்தரோடை, வல்லிபுரம், மாதோட்டம், கோணேஸ்வரம் என்பன முக்கிய நகரங்களாகவும், வர்த்தக மையங்களாகவும் விளங்கின. இதனுல் பலநாட்டு வர்த்தகர்கள் நடமாட்டம் ஏற்பட்டதுடன் அவர்களது பண்பாட்டுச் செல்வாக்கும் இடம்பெற்றன. குறிப்பாக கிரேக்க, ரோம, சீன, இந்தியத் தொடர்பின் முக்கியத்துவத்தை இலக்கியங்களிலும், தொல்பொருட் சின்னங்களிலும் காணலாம். இவ்வாருன இடங்களில் பௌத்த சின்னங்கள் காணப்பட்டமைக்கு சமகாலத்தில் தென்னிந்தியாவில் சிறப்பாக, ஆந்திராவில் பௌத்தம் செல்வாக்குப் பெற்றதுடன் இலங்கையின் ஏனைய பிராந்தியங்கள் போல இப்பிராந்தியங்களும் ஆந்திராவுடன் நெருங்கிய கலாசாரத் தொடர்பினைக் கொண்டிருந்ததே காரணமாகும். இதன் தொடர்ச்சியாகவே தமிழ் நாட்டில் பல்லவ, சோழ பாண்டிய அரசுகள் எழுச்சியடைந்தபோது அதன் செல்வாக்கும் இடம்பெற்றன.

கிழக்கு மாகாணத்தில் குச்சவெளி என்னும் இடத்தில் 1965-ம் ஆண்டு தலையில்லாத புத்தர்சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆறு அடி உயரம் கொண்ட நிற்கும் நிலையில் அமைந்த இச்சிற்பம் ஒருவகைச் சுண்ணும்புக் கல்லினுல் அழகிய வேலைப்பாடுகளுடன் ஆக்கப்பட்டுள்ளது. சிற்பத்தின் காவி உடைக்குக் கீழே பாதங்களுக்கு இடையில் இரு மலர்ச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இப்படியான சிற்பத்தை இலங்கையில் வேறு எந்தப் புத்தர்சிலையிலும் காணமுடியாது. (இந்திரபாலா. கா., 8 8-86). இதன் அங்க அமைப்புக்களும் உடை அணியப்பட்டுள்ள விதமும் கி. பி. 2-ம் நூற்ருண்டுக்குரிய ஆந்திரப் புத்தர் சிலைகளின் அமைப்பினை நினைவுபடுத்துகின்றது. (Wijeyasekara, N , 1962, p. 15)

கிழக்கு மாகாணத்தைப் போன்றே வடமாகாணத்தின் சில பகுதிகளிலும் பௌத்த கலைச் சின்னங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதில் கந்தரோடை, சுன்ளுகம், வல்லிபுரம், புத்தூர் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. கந்தரோடையின் தொல்பொருளியற் சிறப்பினை வெளியுலகிற்கு முதன்முதலாக எடுத்துக் காட்டிய பெருமை போல் பீரிஸ் என்ற அறிஞரைச் சாரும். இவரைத் தொடர்ந்து பிடல் என்பவரும், பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொனற், பரொான்சன், விமலா பெக்லி கியோரும் இப்பணியைத் தொடர்ந்து செய்தனர். இவர்களின் பணியால் இந்து பௌத்த மத வழிபாட்டுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் பௌத்த மத வழிபாட்டுடன் தொடர்புடைய 20க்கு மேற்பட்ட ஸ்தூபிகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் ஸ்தூபிகளுக்குரிய முடிகள், தூண்கள், கர்மிகா என்பனவும் அழிபாடுகளிடையே கண்டுபிடிக்கப்பட்டன. இது மேலும் பல ஸ்தூபிகள் இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது. (Godakumbara, C. E , 1968, p. 12) இங்கு ஆந்திர தொடர்பை வலியுறுத்த பௌத்தக்கலைகள் மட்டுமல்ல; நாணயங்கள், கல்வெட்டுக்கள் என்பனவும் காணப்படுகின்றன. இங்கு கண்டெடுக்கப்பட்ட பௌத்த சின்னங்களில் புத்தரது சிலைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இதில் இருக்கும் நிலையிலான தலையற்ற புத்தர்சிலை சிறப்பாகக் குறிப்பிடத்

தக்கது. ஆந்திராவுக்குரிய ஒருவகைப் பளிங்குக் கல்லால் ஆக்கப்பட்ட இச்சிலை 15 அந்தர் நிறையினை உடையது. மார்பகம் மட்டும் 5½ அடி அகலம் கொண்டது. (Ibid) முழங்காலில் நின்று வணங்கக்கூடிய வகையில் தட்டையான ஆசனத்தில் செதுக்கப்பட்டுள்ள இச்சிற்பத்தின் கால் உடைந்த நிலையில் உள்ளது. சிலையின் வலதுபக்க முழங்கை தனியான கல்லில் செதுக்கப்பட்டு இவற்றுடன் இணைக்கப்பட்டுள்ளது. மடிப்புக் குலையாத நிலையில் இதன் போர்வை வலதுபக்க மார்பை மூடிய நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இதன் சாந்தமும் கருணையும் அமராவதிக் கலைமரபை அப்படியே பிரதிபலிக்கின்றது. நிற்கும் நிலையில் அமைந்த புத்தர் சிலை ஒன்று 1916-ம் ஆண்டு போல் பீரிஸ் என்பவரால் சுன்னாகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. (Lewis, J. P., 1916, p. 96) 12 அடி உயரமும் 20 அங்குல மார்பகமும் கொண்ட இச்சிலை ஒருவகைப் பளிங்குக் கல்லால் ஆக்கப்பட்டது. மேலங்கியின் அமைப்பு பாதத்தினை மறைப்பதாக பாதத்தில் இருந்து மடிக்கப்பட்டு இடது பாகத்தினை மறைத்த நிலையில் இடது கையில் இருந்து கீழ் நோக்கித் தொங்குவதாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆந்திரக் கலைமரபின் சாயலைக் காணலாம்.

ஈழத்தில் தொன்மையான கலாசார வரலாற்றைக் கொண்டுள்ள பிரதேசங்களுள் யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த வல்லிபுரக் குறிச்சியும் ஒன்றாகும். இங்குள்ள விஷ்ணு கோவிலுக்கு அருகே மிகப் பழமையான தாழிக்காடு கண்டுபிடிக்கப்பட்டதுடன் கோவிலின் அருகே மிகப் பழைய கட்டிட அழிபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (சிவசாமி,வி., 1973., ப. 98) அத்துடன் இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வின்போது தற்போதைய வல்லிபுரக் கோவிலுக்கு வடக்கே 50 யார் தொலைவில் புத்தரது சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ஒருவகைப் பளிங்குக் கல்லால் ஆக்கப்பட்ட நிற்கும் நிலையிலான இப்புத்தர் சிலையின் வலது கரம் உடைந்த நிலையில் உள்ளது. வலது மார்பும் தோளும் காவி உடையினால் மறைக்கப்பட்டுள்ளது. ஆடையின் அமைப்பு பாதத்தினை மறைத்த நிலையில் பாதத்தில் இருந்து மடிக்கப்பட்டு மீண்டும் இடது கையில் இருந்து கீழ்நோக்கிச் செல்வதாகச் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் பொதுவான அமைப்பும் ஆடை மடிப்பில் காணப்படும் தெளிவான தன்மையும் ஆந்திரக் கலைமரபின் செல்வாக்கைப் பிரதிபலிக்கின்றன. சிறிது காலம் யாழ்ப்பாணப் பழைய பூங்காவில் வைக்கப்பட்டிருந்த இச்சிலை தற்போது பர்மிய நாட்டில் காணப்படுகின்றது. (Lewis, J. P., 1916) 1954-ம் ஆண்டு புத்தூர் என்ற இடத்தில் ஒரு புத்தர் சிலை கண்டுபிடிக்கப்பட்டது. புத்தூரையும் சுன்னாகத்தையும் இணைக்கும் பிரதான வீதியின் மேற்குப் பகுதியில் நிலாவரை என்ற இடத்திற்கு அண்மையில் உள்ள தோட்டத்தில் இச்சிலை காணப்பட்டது. ஒருவகைச் சுண்ணாம்புக் கல்லால் ஆக்கப்பட்ட இச்சிற்பத்தின் பல பாகங்கள் உடைந்த நிலையில் உள்ளன. இது 3 அடி 3 அங்குல உயரமுடையது. தலை மாத்திரம் 1 அடி 2 அங்குலம் உயரத்தைக் கொண்டது. (Ceylon Today, 1967., p. 17) இச்சிலையின் அங்க அமைப்பும் உடையின் பாணி அமைப்பும் வல்லிபுரப் புத்தர் சிலையை ஒத்துள்ளன.

தென்னாசிய சிற்பக் கலையில் காணக்கூடிய சிறப்பான அம்சங்களில் ஒன்று நீண்ட கதைகளைச் சிற்பங்கள் மூலம் வெளிப்படுத்தியமையாகும். இதில் பௌத்த நூல்களில் கூறப்பட்ட புத்தருடைய வாழ்க்கையுடன்

சம்பந்தப்பட்ட பல சம்பவங்களைப் புடைச்சிற்பங்களாக வெளிப்படுத்தியமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாறான சிற்பங்கள் அக்கால மக்களது சமய நம்பிக்கைகளை மட்டும் புலப்படுத்தவில்லை. சமகால மக்களது வாழ்க்கை முறையினையும் பண்பாட்டுச் சிறப்பினையும் பிரதிபலித்து நிற்கின்றன. இத்தகைய சிற்பங்களை, பொதுவாக ஸ்தூபியைச் சுற்றிவர அமைந்த அளிகள், வேதிகைகள், தோரணப்பகுதியில் காணப்பட்ட தூண்கள் என்பவற்றில் காணலாம். இதற்கு ஆந்திரா குறிப்பாக அமராவதி ஸ்தூபிகள் சிறந்த உதாரணங்களாகும். ஆனால் ஈழத்தைப் பொறுத்த வரை இப்படியான கலை அம்சம் அதிகம் வளரவில்லை என்றே கூறலாம். (Wijeyasekara, N. 1962, p. 144) எனினும் யாதகக் கதைகள் சித்திரிக்கப்பட்ட ஒரு சில புடைச்சிற்பங்கள் அநுராதபுரத்தின் சில பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் மாயாதேவிகனவு, சித்தார்த்தர் துறவு, ஸ்ராவஸ்தி அற்புதம் என்பன குறிப்பிடத்தக்கன. ஆரம்பத்தில் இவை ஆந்திராவில் ஆக்கப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப் பட்டிருக்க வேண்டும். (Paranavitana, S., 1971., p. 129) ஆயினும் பின்பு இவை இலங்கையிலேயே படைக்கப்பட்டிருக்கலாம்.

இவ்வாறான புடைப்புச் சிற்பங்களில் ஸ்ராவஸ்தியில் நடந்த அற்புதத்தைச் சித்திரிக்கும் சிற்பமானது கலை வேலைப்பாட்டில் காலத்தால் முந்தியதாகும் (Wijeyasekara, N., 1962) புத்தரது வாழ்க்கையில் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளதாக, பௌத்த யாதக கதைகள் கூறுகிறது. இதில் யமக பாடிஹாரியம் எனப்படும் இரட்டை அற்புதம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. ஒருமுறை அவர் மந்திர சக்தியினால் ஆகாயத்தில் எழுந்து நின்றபோது முதலில் உடலின் மேற்பாகத்திலிருந்து நெருப்பும், கீழ்ப்பாகத்தில் இருந்து நீரும் புறப்பட்டன என்றும் பின்னர் மேற்பாகத்திலிருந்து நீரும் கீழ்ப்பாகத்திலிருந்து நெருப்பும் புறப்பட்டனவென்றும் இதேபோன்று உடலின் இடது. வலது புறங்களிலிருந்து நீரும் நெருப்பும் மாறிமாறி வெளிப்பட்டன என்றும் அப்பௌத்த நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு வேறுபட்ட இருபத்திரண்டு அற்புதங்கள் மூன்று இடங்களில் நடந்தன. அதில் ஒன்றே ஸ்ராவஸ்தி நகரமாகும். (Wijeyasekara, N., 1962. p. 144) இவ் அற்புதத்தைப் புலப்படுத்துவதாகவே முன்பு கூறப்பட்ட புடைப்புச் சிற்பம் விளக்குகிறது.

இவ்வாறான சிற்பங்கள் வட இந்தியாவில் காந்தராவிலும் (Paranavitana, S., 1971) தென்னிந்தியாவில் ஆந்திராவிலும் (ibid) காணப்படுகின்றன. அண்மையில் இலங்கையில் அநுராதபுரத்தில் பழுதடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட புடைப்புச் சிற்பமும் இவ் அற்புதத்தையே வெளிப்படுத்துவதாகப் பேராசிரியர் வோகெல் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (Paranavitana. S., 1936, p. 16) ஆயினும் இலங்கைச் சிற்பத்திற்கும் காந்தரா சிற்பத்திற்கும் அமைப்பு ரீதியில் வேறுபாடு காணப்படுகின்றன. அநுராதபுர சிற்பத்தில் புத்தர் அபய முத்திரைக் கையுடன் ஆசனத்தில் அமர்ந்திருக்க அவரைச் சூழப் பலர் காணப்படுகின்றனர். (Wijeyasekara. N. 1962., plat) ஆனால் காந்தராவில் புத்தர் பத்மாசனத்தில் வீற்றிருக்க அவரைச் சூழப் பெருந்தொகையான தெய்வங்களும் பிறவும் காணப்படுகின்றன. (இந்திரபாலா., கா. 1969-08-01) ஆனால் ஆந்திரச் சிற்பத்தைப் பொறுத்த வரை அது இலங்கையுடன் நெருங்கிய ஒற்றுமைத் தன்மை கொண்டுள்

ளன. (Saraswati, S. K., 1975. plate. XII) இலங்கைச் சிற்பத்தில் காணப்படும் ஆட்களுடைய வடிவம், அவர்கள் அணிந்துள்ள தலைப்பாகைகளின் அமைப்பு, முதுகினைக் காட்டி நிற்கும் பாத்திரங்கள் செதுக்கப்பட்டுள்ள முறை, ஆண் பாத்திரங்கள் அணிந்துள்ள இடைத்துண்டின் வடிவம், இந்த இடைத்துண்டுகள் அணியப்பட்டுள்ள முறை, ஆசனங்களின் வடிவம், அவற்றில் காணப்படும் கோலங்கள் கி. பி. 2-ம் நூற்றாண்டுக்குரிய அமராவதிக் கலைமரபை நினைவூட்டுகின்றது. (இந்திரபாலா, கா. 1-8-69) அண்மையில் ஈழத்துச் சிற்பக்கலை வரலாறு பற்றி ஆராய்ந்த நந்தா விஜயசேகர என்பவர் இச்சிற்பம் பற்றிக் குறிப்பிடுகையில் ''இவற்றை ஆக்கப் பயன்படுத்தப்பட்ட ஒருவகைச் சுண்ணாம்புக்கல்லும் சிற்பம் வடிப்பதில் கையாளப்பட்டுள்ள கலை நுட்பங்களும் ஆந்திராவை ஒத்துள்ளமையால் இவை அங்கு ஆக்கப்பட்டுப் பின்னர் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம்''. என்றார். (Wijeyasekara, N., 1962, p. 44)

அண்மையில் அநுராதபுரத்தில் கி. பி. 4-ம் நூற்றாண்டுக்குரிய ஒரு புடைச்சிற்பம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சற்றுப் பழுதடைந்த நிலையில் காணப்படும் இச்சிற்பம் தற்போது கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (Paranavitana, S, 1971, p. 129) இச்சிற்பம் அமராவதி, நாகர்ஜுனகொண்டா போன்ற இடங்களில் காணப்பட்ட ஒருவகைச் சுண்ணாம்புக்கல்லில் ஆக்கப்பட்டிருந்தமையால் இதுவும் முன்பு குறிப்பிட்ட சிற்பத்தைப்போன்று ஆந்திராவில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். (Ibid) இதில் சித்திரிக்கப்பட்டுள்ள காட்சியானது புத்தரது பிறப்புடன், சம்பந்தப்பட்ட மாயாதேவியின் கனவினைப் பிரதிபலித்து நிற்கிறது.

பௌத்த யாதகக் கதைகள் இளவேனிற் காலத்தில் ஒருநாள் மாயாதேவி உறங்கிக் கொண்டிருக்கையில் ஒரு கனவு கண்டார் என்றும் அந்த கனவில் ஆறு தந்தங்களைக் கொண்ட ஒரு இளம் வெண்ணிற யானை மாயாதேவியின் கர்ப்பத்தை அடைந்தது எனவும், அந்த வேளையில் பல்லாயிரக்கணக்கான தெய்வங்கள் காட்சியளித்தன என்றும் கூறுகின்றன. இவ்வாறான ஒரு கதையினையே அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட புடைச்சிற்பத்தில் மிக அழகாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (Wijeyasekara, N, 1962) இது போன்ற சிற்பங்கள் ஆந்திரா ஸ்தூபிகளிலும், பிற பௌத்த வழிபாட்டுக் கட்டிடங்களிலும் காணப்படுகின்றன. (Barrett, D., 1954 pl. VII) அத்துடன் இவ் இரு நாட்டுச் சிற்பங்கள் வடிவ அமைப்பிலும், பாணி அமைப்பிலும் ஒரு நாட்டு உற்பத்தி போன்று காணப்படுகிறன. சிறப்பாகப் பெண் அணிந்துள்ள அதிக இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்ட மேகலையும் அவர்களுடைய கண்களின் அமைப்பும் நெருங்கிய ஒற்றுமைத் தன்மை கொண்டுள்ளன. (இந்திரபாலா, கா., 24-7 68)

புத்தரது வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் அவரது துறவறம் பற்றிய சம்பவம், சிற்பக் கலைஞர்களின் கூடிய கவனத்தை ஈர்த்துள்ளது இவற்றைச் சித்திரிக்கும் புடைப்புச் சிற்பங்கள் ஆந்திராவிலும் பிற பௌத்த நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும் கூட இத்தகைய புடைப்புச் சிற்பம் ஒன்று 1875-ம் ஆண்டு அம்பலாந்தோட்டைக்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. புத்தரது பெருந்துறவினைக் குறிக்கும் இந்நிகழ்ச்சி 11½ சதுர அங்குல பரப்பில் புடைப்புச்

சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. (Paranavitana, S., 1936, p. 16) பௌத்த நூல்களின் கூற்றுப்படி சித்தார்த்தர் இருபத்தொன்பது ஆண்டுகளாக ராஜபோகங்களை அனுபவித்த பின்னர் ஒருநாள் தன் மனைவி யசோதராவையும், மகன் ராகுலனையும் விட்டு யாருக்கும் தெரியாமல் தன்னுடைய குதிரையில் ஏறி வெளியே சென்று துறவறம் பூண்டதாகக் கூறுகிறது. இத்தகைய சம்பவமே அமராவதியிலும் இலங்கையிலும் உள்ள புடைப்புச் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இலங்கையில் செதுக்கப்பட்ட சிற்பத்தில் இக்காட்சி சற்று வேறுபட்ட முறையில் செதுக்கப்பட்டுள்ளது. (இந்திரபாலா, கா., 1-8-69) அமராவதி சிற்பத்தில் அழகாகச் சித்திரிக்கப்பட்ட இக்காட்சியில் சித்தார்த்தர் குதிரையில் ஏறிச் செல்வதையும் புடைசூழச் சிலர் நிற்பதையும் ஒருவர் குடைபிடிப்பதையும் காணலாம். (Barrett, D. 1954, pl-XIII) ஆனால் இலங்கைச் சிற்பத்தில் சித்தார்த்தர் அபயமுத்திரைக் கையுடன் நிற்கிறார். அவருக்குப் பின்னால் கந்தரா குதிரை நிற்கிறது. மூன்று தெய்வங்கள் வணங்கி நிற்க ஒரு தெய்வம் அவருடைய பிரசித்தி பெற்ற பிட்ஷா பாத்திரத்தைக் கொண்டுவந்து கொடுக்கிறது. அருகில் குதிரைப்பாகன் நிற்கிறான். (Wijesekara, N. 1962, pl-72) இக்காட்சி இல்லத்தை விட்டுச் செல்லும் காட்சியன்று. இல்லத்தை விட்டு வெளியேறிய பின் தன் குதிரையையும் பாகனையும் விட்டுத் துறவியாக, பிட்ஷா பாத்திரத்தையும் ஏற்றுச் செல்லுகின்ற காட்சியாகும். (இந்திரபாலா. கா., 1-8-69) இச் சிற்பத்தின் பாணி அமைப்பு முற்பட்ட அமராவதி கலைப்பாணியில் இருந்து சற்று வேறுபட்டு இருப்பதால் சில கலை வரலாற்று ஆசிரியர்கள் இச் சிற்பம் குப்தர் கலை மரபிற்கு அல்லது பல்லவ கலை மரபிற்கு உரியதாகலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் இச்சிற்பத்தை ஆக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள பளிங்குக்கல் ஆந்திரப் பிரதேசத்திற்கு உரியது மட்டுமன்றிப் புத்தருடைய உடல் உறுப்புக்கள் சற்றுப் பெரிதாக இருப்பதும் குதிரையின் அமைப்பு, பாகனுடைய தலைப்பாகையின் அமைப்பு, முகில்கள் சித்திரிக்கப்பட்டுள்ள முறை பிற்பட்ட அமராவதி கலைப்பாணியை ஒத்திருக்கிறது. ஆகையால் இச்சிற்பம் ஆந்திராவில் செதுக்கப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். (Wijesekara, N., 1962)

சிகிரியாவில் காணப்படும் தாதுகர்ப்பத்தில் இருந்து சுண்ணாம்புக் கல்லினால் ஆன புடைப்புச் சிற்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நான்கு பக்கங்களைக் கொண்ட புடைப்புச் சிற்பத்தின் ஒவ்வொரு பகுதியும் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சற்றுப் பழுதடைந்த நிலையில் காணப்படும் இச்சிற்பம் இந்தியப் புராணக் கதைகளில் கூறப்படும் மேருமலையைச் சித்திரிப்பதாகக் கருதப்படுகிறது. (Paranavitana: S. 1936, p. 16) இச் சிற்பத்தை ஆக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒருவகைச் சுண்ணாம்புக்கல் ஆந்திராவுக்கு உரியதாக இருப்பதாலும் இச் சிற்பத்தில் காணப்படும் உருவங்கள் அமராவதியை ஒத்திருப்பதாலும் இது ஆந்திராவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம். தற்பொழுது இது கொழும்பு நூதனசாலையில் காணப்படுகிறது.

இதே போல பொலநறுவையில் அழிந்த நிலையில் காணப்படும் பபலு விகாரையின் தூபியில் இருந்து அமராவதி கலைமரபுக்குரிய சில புடைப்புச்

சிற்பங்கள் 1909-ம் ஆண்டு எச். சி. பி. பெல் என்பவரால் கண்டு எடுக்கப்பட்டுள்ளது. இவ்விகாரை கி. பி. 12-ம் நூற்றாண்டுக்குரியதாயினும் இதில் காணப்படும் சில புடைப்புச் சிற்பங்கள் முற்பட்ட அநுராதபுர காலத்தைச் சேர்ந்தவையாகும். இத்தகைய சிற்பங்கள் அமராவதியில் இருந்து கொண்டுவரப்பட்டு நீண்டகாலமாக அநுராதபுரத்தில் வழிபாட்டுச் சின்னங்களாகப் பயன்படுத்தப்பட்டுப் பின்னர் பொலநறுவை பபலு விகாரையில் இடம்பெற்றிருக்க வேண்டும். (Paranavitana, S., 1936)

ஈழத்து பௌத்த சிற்பக்கலையில் பிரதானமான ஒருகலையம்சமாக சந்திர வட்டக்கல் (Moon stone) இடம்பெறுகிறது. இலங்கைக்குரிய பௌத்த சிற்பக் கலையம்சங்கள் பல பௌத்தத்துடன் கூடவே இந்தியாவில் இருந்து புத்தூக்கம் பெற்றுள்ள போதிலும், இந்நாட்டிற்கே உரிய சில தனித்துவக் கலையம்சங்கள் தோற்றம் பெற்றன என்பது மறுப்பதற்கில்லை. இதற்குச் சந்திரவட்டக்கல் சிறந்த உதாரணமாகும். இதில் காணப்படும் பல்வேறு சிற்ப வடிவங்கள் இலங்கைக்கேயுரிய தனித்துவக் கலையம்சமாகக் காணப்படுகிறது. ஆயினும் ஈழத்தில் இக்கலையம்சம் இடம்பெறுவதற்கு ஆந்திரப் பிரதேசம் முன்னோடியாக இருந்ததென்பதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. (Paranavitana, S., vol. XVII)

சந்திரவட்டக்கல் என்பது பௌத்தமத வழிபாட்டுடன் தொடர்புடைய விகாரை, ஸ்தூபி அல்லது பிம்பகம் போன்ற கட்டிடத்தின் பிரதான வாசலின் படிக்கட்டுக்கு முன்பு அரைவட்ட வடிவில் அமைந்த பாகமாகும். (Ibid) இக்கலையம்சம் இந்துக் கோவில் சிலவற்றிற் காணப்பட்ட போதிலும் ஈழத்தில் இது பெரும்பாலும் பௌத்த கட்டிடங்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. காலத்தால் முந்திய சந்திரவட்டக் கற்கள் மிகிந்தலை, அபயகிரிவிகாரை, கந்தரோடை போன்ற இடங்களிற் காணப்பட்டன. (Ibid) இவை கி.மு. 1-ம் 2ம் நூற்றாண்டுக்குரியது. தொடக்க கால சந்திரவட்டக் கற்கள் அலங்காரம் அதிகம் இல்லாது வெறுமையானதாகக் காணப்பட்டது. இது ஆந்திரக் கலைத்தொடர்பைக் காட்டுகிறது. குறிப்பாக அமராவதி, நாகர்ஜுனகொண்டா போன்ற இடங்களில் உள்ள சந்திரவட்டக் கற்களை எடுத்தால் அவை மூன்று கற்களை இணைப்பதன்மூலம் ஆக்கப்பட்டது. இதில் ஒரு அரைவட்டக் கல்லில் மாத்திரம்தான் சிற்பங்கள் காணப்படும். இத்தகைய அம்சங்கள் கந்தரோடை, அநுராதபுரத்திலுள்ள அபயகிரி விகாரை போன்ற இடங்களிற் கண்டுபிடிக்கப்பட்ட சந்திரவட்டக் கல்லில் காணப்பட்டன. (Paranavitana, S., 1936) இந்தியச் சிற்பக் கலைமரபில் தாமரைப்பூ ஒரு முக்கிய அம்சமாகக் காணப்பட்டது. பல மதங்களின் பொதுவான சின்னமாகக் காணப்பட்ட இத்தாமரைப்பூ ஆந்திர சந்திர வட்டக் கல்லில் முக்கிய கலையம்சமாக இடம்பெற்றது. இவற்றின் செல்வாக்கு இலங்கைச் சந்திரவட்டக் கல்லிலும் இடம்பெற்றன. குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் திரியாய் என்ற இடத்தில் உள்ள வட்டமான சைத்தியக் கிருகத்திற காணப்பட்ட சந்திரவட்டக் கல்லில் இவற்றைக் காணலாம்.

ஆனால் பிற்பட்ட சந்திரவட்டக் கல்லின் வடிவ அமைப்பிலும் அலங்காரத்திலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆரம்பத்தில் மூன்று அரை

வட்டக்கற்கள் கொண்டு இணைக்கப்பட்ட கலையம்சத்தில் பின்பு எட்டு அரைவட்டக் கற்கள் கொண்டு இணைக்கப்பட்டதுடன் பொலநறுவை காலத்தில் முழு வட்டவடிவமாகவும் மாறியது. (Wijesekara, N., 1962) அதேபோல அலங்காரத்திலும் பல புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. இதில் இலங்கைக்குரிய தனிக் கலையம்சமாக யானை, குதிரை, நாக்கு, நீ, எருது, கொடிப்பின்னல் என்பன இடம்பெற்றன. இவை ஈழத்துச் சிற்பக்கலை வரலாறு இந்தியப் பொதுமைக்கு உட்பட்டு வளர்ந்தாலும் தனக்குரிய சில தனித்துவங்களைக் கொண்டு வளர்ந்துள்ளன என்பதனைக் காட்டுகின்றது. மேலே கூறப்பட்ட பல சிற்பங்களைத் தவிர, ஆந்திரக்கலை மரபுக்குரிய வேறும் சில சிற்பங்கள் ஈழத்தில் சரியாக ஆராயப்படாமலும் கண்டுபிடிக்கப்படாமலும் உள்ளன. இவைகள் எதிர்கால ஆய்வினுல் வெளிக்கொணரப்படலாம்.

எனவே நாம் ஆந்திராவுக்கும் ஈழத்துக்கும் இடையிலான நீண்டகாலக் கலாசாரத் தொடர்பிற்குப் பௌத்த சிற்பங்களையும் சிறந்த சான்றுகளாகக் கொள்ளலாம். ஈழத்தில் இக்கலைகள் தோன்றி வளர்வதற்கு ஆந்திரக் கலைமரபே முன்னோடியாக அமைந்தது. இது ஈழத்துக் கலைவரலாற்றில் ஏற்பட்ட ஒரு காலப்பகுதிக்குரிய நிகழ்ச்சியைக் குறித்து நிற்கும் அதேவேளை மரபு வழியாக ஈழத்துப் பண்பாட்டு வரலாற்றில் தென்னிந்தியா செலுத்திய பங்களிப்பினையும் காட்டி நிற்கிறது. ஈழத்தின் ஆதிக்குடிகளும் நாகரிகத்துக்கு வித்திட்ட பெருங்கற்காலப் பண்பாடும் தென்னிந்தியாவில் இருந்து, சிறப்பாக, தமிழ்நாட்டில் இருந்து வந்தன என்பதைத் தொல்பொருட் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. பின்னர் வரலாற்றுக் காலத்தில் இடம்பெற்ற பௌத்தமும் பௌத்த பண்பாடும் இதே பிராந்தியங்களில் இருந்து பரப்பப்பட்டன என்பதை, தொல்பொருள் சான்றுகள் மட்டுமன்றி சாசன இலக்கிய சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. இவற்றின் ஒரு அம்சமாகவே ஆந்திரக்கலை மரபுக்குரிய ஈழத்துச் சிற்பங்கள் விளங்குகின்றன.

## உசாத்துணை நூல்கள்


இந்திரபாலா, கா. 08-08-1968, ''அமராவதிப் பாணியில் அமைந்த அரிய சிலைகள்'', வீரகேசரி வார வெளியீடு.

31-05-1969, ''ஆந்திரப் படிமக் கலையின் செல்வாக்கு'', வீரகேசரி வார வெளியீடு.

காசிநாதன், நடன. 1978, ''கட்டிடக் கலை'', தமிழக நுண்கலைகள் (ப. ஆ.) ஞானப்பிரகாசம் கமலையா (சென்னை) பக். 82 - 93.

சிவசாமி, வி. 1978, ''இலங்கைச் சிற்பங்கள்'' தமிழாராய்ச்சியின் புதிய எல்லைகள் (ப. ஆ.) வானமாமலை, நா. சென்னை, பக். 100 - 112.

சிற்றம்பலம், சி. க. 1984, ''ஈழமும் இந்து மதமும் – அநுராதபுர காலம்'' சிந்தனை, (ப. ஆ.) சிற்றம்பலம் பக். 108-141. (திருநெல்வேலி).

நீலகண்டசாஸ்திரி, கே. ஏ. 1976, தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டார் குறிப்புக்கள் (சென்னை).

Bandaranayake, Senaka 1974, Sinhalese Monastic Architecture (Leiden)

Brown, Percy 1976, Indian Architecture (Bombay).

Coomaraswamy, A. K. 1956, Introduction to Indian Art (ed.) Mulk Raj Ananda (Madras).

Fergusson, J. T. 1873, Tree and Serpant worship or Illustration of Mythology and Art in India (London).

Geiger, W. 1960, (Eng. tr) Mahavamsa (Colombo).

Godakumbara, C. E. 1965, ''A bronze buddha image from Ceylon'' Artibus Asia Vol. xxvi (Switzerland) pp. 230 - 236.

Hocart, A. M. 1924 -t28, ''Archaeological Summary'' Ceylon Jour. nal of Science Vol. II, (London) pp. 73-97.

Lewis, J. R. 1916, ''Some notes on Archaeological matters in the Northern Province'' Ceylon Antiquary and Literary Register Vol II (Colombo).

Paranavitana, 1936, Art of Ancient Sinhalese (Colombo).

1971, "Example of Andra Art Recently Found in Ceylon" Annual Bibliography of Indian Archaeology Vol xx (Leyden) pp. 13-15.

Parkar, H. 1909, Ancient Ceylon (London).

Roland Benjamin 1953, The Art and Architecture of India (Maryland)

Saraswati, S. K. 1975, A Survey of Indian Sculpture (New Delhi).

Smith, V. S. 1911, A History of Fine Arts in India and Ceylon (Oxford).

Wijayasekara, N. 1962, Early Sinhalese Sculpturer (Colombo).